<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

O.S. No.501/2023 Date : 15-07-2025

பெயர் : சங்கர் குமார் வாசா 1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார். எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏதேனும் இருக்கிறதா என்றால் இல்லை கடையை காலி செய்யசொன்னதால் தான் பிரச்சனை ஏற்பட்டது. பிரதிவாதிக்கு 6 கடைகள் சொந்தமானதாக உள்ளது என்றால் சரிதான் அதில் 4 கடை வாடகைதாரர்கள் காலி செய்துவிட்டார்களா என்றால் 2021ல் பார்த்தபோதுதான் எனக்கு தெரியும். அந்த 4 கடைகளும் வேறு நபர்களுக்கு வாடகைக்கு விடாமல் காலியாக உள்ளது என்றால் சரிதான். 11.07.2019 அன்று பிரதிவாதி தாவா கடையில் இருந்து காலி செய்யுமாறு அறிவிப்பு வழங்கினார் என்றால் சரிதான். வா சா ஆ 1 ஆவணம் பிரதிவாதி எனக்கு வழங்கிய அறிவிப்பு என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட வாடகை ஒப்பந்தம் பதிவுசெய்யப்படாத ஒப்பந்தம் என்றால் சரிதான்.

2) அந்த ஒப்பந்தம் வா சா ஆ 5 என்றால் சரிதான். பிரதிவாதி தாவா கடையில் இருந்து என்னை காலி செய்ய வலியுருத்தி மனு கொடுத்தார் என்றால் சரிதான். பிரதிவாதி RLTOP No. 39/2020 என தாவா கடையில் இருந்து என்னை காலி செய்ய உத்தரவிடக்கோறி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தற்போது அந்த மனு இந்நீதிமன்றத்தில் RLTOP No.66/2023 என பதிவாகியுள்ளது என்றால் சரிதான். முதலில் ஈஸ்வரக்குமார் என்ற வழக்கறிஞர் மூலம் வழக்கை நடத்தி வந்தேன் என்றால் சரிதான்.

3).தாவா கடையில் மேற்படி எனது வழக்கறிஞரின் பெயர்ப்பலகை அமைந்திருந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி அந்த பெயர்ப்பலகை அப்புறப்படுத்த சொன்னாரா என்றால் இல்லை. தாவா கடையை நான் மட்டும் தான் பேக்கரி கடை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு முறையாக அறிவிப்பு அனுப்பி சட்டபடி காலி செய்யுமாறு சொன்னாரா என்றால் இல்லை. பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக என்னை தாவா கடையில் இருந்து வெளியேற்ற முயன்றார் என நான்

குறிப்பிட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது**
**மறுவிசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.